ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2172/6 - 2020 අප්‍රේල් මස 22 වැනි බදාදා - 2020.04.22

*2172/6 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்க அறிவித்தல்**

*சுங்க கட்டளைச் சட்டம் (235 ஆம் அத்தியாயம்)*

**10(அ) ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் கட்டளை**

*1988 ஆம் ஆண்டின் 83 ஆம் இலக்க, சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (235 ஆம் அத்தியாயம்) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10(அ) ஆம் பிரிவினால் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள இறக்குமதி செய்யப்படும் பண்டங்கள் தொடர்பாக, அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள வீதங்களில் முன்னுரிமை மற்றும் பொது தீர்வை வரியில் மேலதிக அறவீடு ஒன்றை 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதி முதல் மீண்டும் அறிவிக்கும் வரையில் செல்லுபடியாகுமாறு இக்கட்டளை மூலம் விதிக்கின்றேன்.*

*1988 ஆம் ஆண்டின் 83 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (235 ஆம் அத்தியாயம்) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10(அ) ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 2020.03.13 ஆந் திகதிய 2166/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்ட கட்டளை 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதி முதல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.*

*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2020, ஏப்பிறல் 22.*

1A - PG 4971 — 567 (2020/04)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| இ. ப. த. இல. | இ. மு. குறியீடு | | விபரம் | தீர்வை வரி மீதான மேலதிக அறவீடு |
| 27.10 | | --- | பெற்றோல் : | |
| | 2710.12.21 | ---- | ஒக்டேன் இல. 92 அடங்கிய பெற்றோல் | லீற்றர் ஒன்றிற்கு ரூ. 26.00 |
| | 2710.12.22 | ---- | ஒக்டேன் இல. 95 அடங்கிய பெற்றோல் | லீற்றர் ஒன்றிற்கு ரூ. 49.00 |
| | 2710.12.29 | ---- | பிற | லீற்றர் ஒன்றிற்கு ரூ. 49.00 |
| | | --- | வாயு எண்ணெய்/டீசல் | |
| | 2710.19.41 | ---- | சுப்பர் டீசல் - 10 மி. கி./கி. கி. (பீபீஎம்) மேற்படாத கந்தகம் அடங்கிய | லீற்றர் ஒன்றிற்கு ரூ. 40.00 |
| | 2710.19.42 | ---- | பிற டீசல் - 10 மி. கி./கி. கி. (பீபீஎம்) மேற்பட்ட எனினும் 500 மி. கி./கி. கி. (பீபீஎம்) மேற்படாத கந்தகம் அடங்கிய | லீற்றர் ஒன்றிற்கு ரூ. 24.00 |
| | 2710.19.49 | ---- | பிற | லீற்றர் ஒன்றிற்கு ரூ. 40.00 |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.